மறைமலைநகர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை : திருமதி. எஸ்.ஷகிலா. பி.எஸ்.சி.,

ந.க.எண். 2569/ 2023 / எப்1 **நாள். 21.03.2024.**
ம.அ. எண். 10/2023–24

பொருள் : **மனைப்பிரிவு அனுமதி** – செங்கல்பட்டு மாவட்டம் – மறைமலைநகர் நகராட்சி – களிவந்தப்பட்டு கிராமம் நில அளவை எண்கள். 313/1எ, 1பி மற்றும் 313/1சி –ல் 4800 சதுர மீட்டர் பரப்பளவுள்ள இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு ஏற்படுத்திட அனுமதி வழங்கி உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை : 1. திரு. ஏ.எம். வேல்முருகன் மற்றும் இருவரது மனு நாள்.08.10.2023.
2. தானப்பத்திர எண். 28212 நாள். 21.11.2023.
3.நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், செங்கல்பட்டு அவர்களின் கடித ந.க.எண். BWI0L8O/2023/TCP நாள். 30.11.2023.
4. நகரமன்ற தீர்மான எண். 10 நாள். 11.03.2024.
5. மனைப்பிரிவு அனுமதிக் கட்டணம் செலுத்திய நாள்.19.03.2024.

உத்திரவு

பார்வை – 1ல் காணும் மனுதாரர், இந்நகராட்சிக்குட்பட்ட களிவந்தப்பட்டு கிராமம் நில அளவை எண்கள். 313/1எ, 1பி மற்றும் 313/1சி –ல் 4800 சதுர மீட்டர் பரப்பளவுள்ள இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு ஏற்படுத்த நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்களுக்கு விண்ணப்பிக்கப்பட்டதில் பார்வை 2ல் காணும் தானப்பத்திரத்தின் மூலமாக அம்மனைப்பிரிவில் உள்ள சாலை மற்றும் பொது திறவிடங்கள் நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. பார்வை 3ல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் கடிதத்தின்படி **இம்மனைப் பிரிவு வரைபடத்திற்கு மவ/நஊஇ(செமா). எண். 245/2023 என எண்ணிடப்பட்டு** தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து, பார்வை 4ல் கண்டுள்ளவாறு

மனைப்பிரிவில் உள்ள சாலை மற்றும் பொது திறவிடங்களை நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டதை ஏற்று இந்நகரமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க நகரமன்ற அனுமதி வழங்கப்பட்டது. அதையடுத்து பார்வை 5ன்படி மனைப்பிரிவு அனுமதிக்கான கட்டணங்கள் இவ்வலுவலக செலுத்துச்சீட்டு எண். 020/01/2/23–24/0004264 நாள். 19.03.2024 ன்படி ரூபாய். 1,71,000/-, 020/01/2/23–24/0004265 நாள். 19.03.2024 ன்படி ரூபாய். 50,000/-மனைப்பிரிவு அனுமதி கட்டணமாகவும், 020/01/2/23–24/0004266 நாள். 19.03.2024 ன்படி ரூபாய். 12,000/- கொடிநாள் கட்டணமாகவும், நிலப்பயன்பாட்டு மாற்று கட்டணம் ரூபாய்.1,61,500/- E-Challan No.20240319007125 நாள்.19.03.2024-ன்படி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, இவ்வுத்தரவு கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும், வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும், மறைமலைநகர் நகராட்சிக்குட்பட்ட களிவந்தப்பட்டு கிராமம் நில அளவை எண்கள். 313/1எ, 1பி மற்றும் 313/1சி –ல் 4800 சதுர மீட்டர் பரப்பளவுள்ள இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு ஏற்படுத்திட அனுமதி அளித்து உத்தரவிடப்படுகிறது.

21/3/24

ஆணையாளர்
மறைமலைநகர் நகராட்சி

21/3/2024

இணைப்பு : நிபந்தனை – 1
மனைப்பிரிவு வரைபடம் – 1

பெறுநர்:
திரு. ஏ.எம். வேல்முருகன் மற்றும் இருவர்
நெ. 5, பிள்ளையார் கோயில் தெரு
களிவந்தப்பட்டு கிராமம், மறைமலைநகர்.

நகல்:
1) நகர் ஊரமைப்பு துணை இயக்கனர், செங்கல்பட்டு மண்டலம், செங்கல்பட்டு அவர்களுக்குதகவலுக்காக அனுப்பப்படுகிறது.
2) சார் பதிவாளர், பத்திரபதிவு அலுவலகம் செங்கல்பட்டு அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
3) வருவாய் ஆய்வர், மறைமலைநகர் நகராட்சி, மனைப்பிரிவில் உள்ள மனைகளுக்கு காலிமனை வரி விதிப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ள.